பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 12 2025 TUESDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. காசிக்கும், ராமேஸ்வரத்திற்கும் இடையில் நீண்டகால உறவு நிலவுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. நாட்டு மக்களுக்கு இடையிலான ஆன்மிக தொடர்புகளை வளர்க்கும் வகையில் காசி தமிழ் சங்கமம் அமைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் மொழியின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உலக அரங்கிற்கு கொண்டு செல்ல பிரதமர் திரு நரேந்திர மோடி நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் சேதமடைந்த சாலைகளை விரைந்து சீரமைக்குமாறு மாநில அமைச்சர் திரு எ வ வேலு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

5. பெரம்பலூரில் நடைபெற்ற பள்ளிகளுக்கு இடையேயான தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியில் மகாராஷ்ட்ரா மற்றும் சி பி எஸ் இ அணிகள் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

காசிக்கும், ராமேஸ்வரத்திற்கும் இடையிலான நீண்டகால உறவை எப்போதும் யாராலும் பிரிக்க முடியாது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரத்தில் இன்று நான்காவது காசி தமிழ் சங்கமம் நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், காசியிலும், ராமேஸவரத்திலும் அதிக அளவில் சிவாலயங்கள் இருந்து வருவதை சுட்டிக்காட்டிய அவர், மொகலாயர் ஆட்சி காலத்தில் காசியில் சிவாலயங்களை அழிக்க முற்பட்டபோது, தமிழகத்திலிருந்து வீர்கள் காசிக்கு படையெடுத்து சென்றதை அவர் சுட்டிக்காட்டினார்.

மகாகவி பாரதி கலாச்சார பண்பாட்டு இணைப்பு குறித்து, ‘‘கங்கை நதிப்புரத்து கோதுமை பண்டம் - காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்’’ என்று பாடியதை திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

(Voice Byte — சி பி ராதாகிருஷ்ணன் - 58 Sec.)

இவ்விழாவில் பேசிய தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, தொன்மை சிறப்புமிக்க தமிழ் கலாச்சாரத்தை காசிக்கு எடுத்துச்செல்லும் விழாவாக தமிழ்ச்சங்கமம் திகழ்வதாக கூறினார்.

தமிழ் மொழியை கற்றுக்கொள்வதற்கு இந்தி உள்ளிட்ட வேற்று மொழியை தாய்மொழியாக கொண்டவர்களும் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திரு ஆர் என் ரவி தெரிவித்தார்.

(Voice Byte — ஆளுநர் - 35 Sec)

நாட்டு மக்களுக்கு இடையிலான ஆன்மிக தொடர்புகளை வளர்க்கும் நோக்கில் காசி தமிழ் சங்கமம் போன்ற விழாக்கள் நடத்தப்படுவதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டின் தொன்றுதொட்ட பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் மெருகூட்டுவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக கூறினார்.

நாட்டின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் காக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் பன்முகத் தன்மையும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற உணர்வையும் வெளிப்படுத்தும் வகையில் காசி தமிழ் சங்கமம் ஆண்டுதோறும் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

மகாகவி பாரதியாரின் கனவை பிரதமர் திரு நரேந்திர மோடி நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ராமர் காலத்தில் இருந்து, காசிக்கும், தமிழகத்திற்கும் நீண்டகால உறவுகள் இருந்திருப்பதை வரலாற்று ஏடுகள் நிரூபித்திருப்பதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மத்திய அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளை எடுத்துரைத்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு திருக்குறளை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்ல மேற்கொண்ட முயற்சிகளையும் ஐ நா சபையில் தமிழ் வளர்ச்சிக்காக இந்தியா குரல் கொடுத்ததையும் எடுத்துக் கூறினார்.

தமிழகத்தின் ஜல்லிக்கட்டு பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுத்தவர் பிரதமர் திரு நரேந்திர மோடி என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில், மழையால் சேதமடைந்த சாலைகளை விரைந்து சீரமைக்க வேண்டும் என்று மாநில பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு எ வ வேலு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இன்று மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நெடுங்சாலைத்துறை பணிகளை ஆய்வு செய்த அவர், சாலை பழுதுகளை நீக்க மேற்கொள்ளப்படும் **Patch Work** பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

சாலைகளை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சாலையோரங்களில் குறிப்பாக மலைப்பகுதிகளில் உள்ள முட்புதர்களை அகற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மழைநீர் வடிந்து செல்ல ஏதுவாக சாலை புருவங்களை சீரமைக்க வேண்டுமா என்று அவர் கேட்டுக்கொண்டார்.

சீரமைப்புப் பணிகளை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் விரைந்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்றும் அமைச்சர் திரு எ வ வேலு வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில், தமிழில் பெயர் பலகை வைக்காத வணிக நிறுவனங்களுக்கான அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டிருப்பதாக செய்தித்துறை அமைச்சர் திரு சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சியை தொடங்கிவைத்தப்பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்ட

அளவிலான தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் இதுகுறித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

மாநில அரசின் சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக கூறிய அவர், தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் பெயர் பலகைகள் வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருப்பதாகவும் திரு சுவாமிநாதன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்திட அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையினை அக்குழுவின் தலைவரும், ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளருமான திரு ககன்தீப் சிங் பேடி இன்று முதலமைச்சரிடம் வழங்கினார்.

சென்னை பெசன்ட் நகரில் மாநகராட்சி மூலம் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடத்தை மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் இன்று திறந்துவைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விளையாட்டு வீரர்களுக்கான உபகரணங்களை மாநில அமைச்சர் திரு காந்தி இன்று வழங்கினார்.

தருமபுரி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் **2026** பணிகள் தொடர்பாக, தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் திரு குல்தீப் நாராயணன் இன்று ஆய்வு செய்தார்.

விழுப்புரம் நகரப்பகுதிகளில் குற்றச்செயல்களை தடுக்கும் விதமாக பொருத்தப்பட்ட சிசிடிவி கேமராக்களை மாவட்ட ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரகுமான் தொடங்கிவைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் **2026** குறித்து வாகனங்களில் ஸ்டிக்கர் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தென்காசி மாவட்டத்தில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், **6** கோடியே **70** லட்சம் ரூபாய் மதிப்பிலான கடனுதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு கமல்கிஷோர் பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

<<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

பள்ளிகளுக்கு இடையேயான தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியில் மகாராஷ்ட்ரா மற்றும் சி பி எஸ் இ அணிகள் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளன.

பெரம்பலூரில் நடைபெற்ற இப்போட்டியில் மகளிர் குழு பிரிவில் மகாராஷ்ட்ராவும், ஆடவர் குழு பிரிவில் சிபிஎஸ்இ அணியும் பட்டங்களை வென்றன.

மகளிர் ஒற்றையர் பிரிவில் மேற்குவங்கத்தை சேர்ந்த ஸ்ரேயா **Dhar**-ம், ஆடவர் ஒற்றையர் பிரிவில் சிபிஎஸ்இ அணியை சேர்ந்த அக்ஷயும் தங்கப்பதக்கத்தை வென்றனர்.

ஹாங்காங் சர்வதேச ஓபன் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Visakh N R** வெண்கலப்பதக்கம் வென்றார்.

<<<<<<END>>>>>>